பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 120
இதழ்: 9

13—05—1994
விலை ரூபா 5-00

மே மாதம்
வந்ததே வணக்கமாதம்
*மரியாயின் மாதமே!*

மே 15
ஆண்டவரின் விண்ணேற்பு விழா
**சமூகத் தொடர்பு சாதன நாள்**
பார்க்க — பக். 2 — 3

மே 22
தூய ஆவியின் ஞாயிறு
**புதுப்பித்துப் பகிரும் யாழ் திருச்சபையின் 'பிறப்பு நாள்'**
பார்க்க — பக். 3 — 4

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

# 'தமிழ்த்தூதுப் பணி இன்று மிகவும் அவசியம்'

* ஆயர் S. ஜெபநேசன்

**"தமிழ்த்தூதுப் பணியில் ஈடுபடுவதற்கு மற்றெல்லாரையும் விடக் கத்தோலிக்க மதகுருமாருக்கே அதிக தகுதியும், கடப்பாடும் உண்டு என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்". என்று புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் "தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை" ஆற்றிய தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் பேரருட் கலாநிதி S. ஜெபநேசன் அவர்கள் குறிப்பிட்டார்.**

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த இரண்டாவது நினைவுப் பேருரை கடந்த மே மாதம் 6 ஆம் திகதி பி. ப. 4.15 மணியளவில் குருத்துவக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த நினைவுப் பேருரை நிகழ்வுக்கு அருள்திரு லூயிபொன்னையா O.M.I. அவர்கள் தலைமை தாங்கினார். குருத்துவக் கல்லூரி அதிபர் அருள்திரு எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார், தனிநாயகம் தமிழ்மன்ற இயக்குனர் அருள் திரு எஸ். எட்வின் அடிகளார் ஆகியோரும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தினர். ஆயர் அவர்களின் பேருரையின் முடிவில் கலந்துரையாடல் இடம் பெற்றது. அதில் பேராசிரியர் சண்முகதாஸ் உட்பட பலர் தங்கள் கருத்துக்களைத்தெரிவித்தனர்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

பாப்பரசரின்

# இலங்கைத் திருப்பயண நிகழ்வுகள்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் எதிர்வரும் ஜனவரித் திங்கள் 20–21ஆம்திகதிகளில் இலங்கைக்குத் திருப்பயணம் மேற்கொள்வாரென இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை உத்தியோகபூர்வமாக இம்மாதம் 22ஆம் திகதி—தூய ஆவியானவரின் பெருவிழா—ஞாயிறு அன்று இறைமக்களுக்கு ஒரு விசேட சுற்றுமடல் மூலம் அறியத்தரவிருக்கிறது.

இன்று வரை இடம் பெற்ற திருத்தந்தையின் திருப்பயணச் செயற்பாட்டுக் குழுக் கூட்டங்களின் தீர்மானங்களுக்கேற்ப 1995 ஜனவரி 20 ஆம் நாள்—வெள்ளிக்கிழமை, பி. ப. 4-00 மணிக்கு திருத்தந்தை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைவார். அங்கு ஒரு வரவேற்பு வைபவம் இடம்பெறும். அங்கிருந்து மோட்டார் வாகன ஊர்தியில்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## கொழும்பில் பொதுநிலையினரின் கூட்டம்

தேசிய மேய்ப்புப்பணி மாநாட்டுடன் தொடர்பான தேசிய பொதுநிலையினரின் பேரவைக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 13 – 15 திகதிகளில் கொழும்பில் இடம்பெற உள்ளது. இதில் கலந்து கொள்ள யாழ். மறைமாவட்டத்திலிருந்து 14 பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்திலிருந்து 7 பேரும், யாழ். மேய்ப்புப்பணி மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளிலிருந்து மற்றும் 7 பேரும் யாழ் ஆயரால் தெரிவு செய்யப்பட்ட போதிலும் பிரயாணச் செலவு தடையாயுள்ளது.

## ஆயர் திருநிலைப்படுத்தலின் ஆண்டு நிறைவு

07-05-1983



திருமலை—மட்டுநகர் ஆயர்
பேரருட்திரு
**இன்ஸ்லி சுவாம்பிள்ளை**

11-05-1968



இளைப்பாறிய யாழ் ஆயர்
பேரருட்திரு
**வ. தியோகுப்பிள்ளை**

யாழ்ப்பாணத் திருச்சபையின் நற்றவப் பேற்றின் நன்று கனிகளாக விளங்கும் எமது பேரன்புக்குரிய ஆயர்கள் இருவரும் நற்சுகபலமும் இறையருளும் நிறைவாகப் பெற்று நீடு வாழவும், மக்கள்பணி செய்து இறைபுகழ் வளர்க்கவும் எமது [illegible]களில் நினைவு கூருவோமாக!

# மண்ணில் வேரூன்றி வளரும் கிளிநொச்சி மறைக்கோட்டம்

கடந்த இரண்டாம் திகதி (2-5-94) காலை 9-00மணிக்கு யாழ். ஆயர் மேதகு தாமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கிளி, முல்லை மறைக் கோட்டக் குருக்கள் புடைசூழ, பயிற்சி பெற்ற — பயிற்சி பெற என வருகைதந்த "நற்செய்திப்பணியாளர்கள்" சூழ்ந்து நிற்க, எமது மறைக் கோட்ட முதல்வரின் அழைப்பை ஏற்ற, கன்னியர்கள், கல்விமான்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பங்கு மக்கள் பங்கெடுக்க, சம்பிரதாய முறைப்படி கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது "சௌந்தர மண்டபம்" என பெயர் தாங்கி நிற்கும் இப் பணி மனை.

இயக்குநர் அலுவலகம், மாணவர் விடுதி, சிற்றாலயம், கேட்போர் கூடப், பயிற்சி

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## ஆயரின் சூறாவளிப் பயணம்

'ஈஸ்ரர்' காலத்தில் இடம் பெறும் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் கூட்டத்தில் பங்குபற்றி, கொழும்பிலிருந்து யாழ் குடாநாட்டிற்குத் திரும்பும் வழியில், யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது மேய்ப்புப்பணிக்கான முயற்சிகளை மேற்கொள்ள கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் 9 நாள்கள் தங்கியிருந்தார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி கிளிநொச்சியை வந்தடைந்த ஆயர், மறுநாள் சனிக்கிழமை புதுக்குடியிருப்புப் பங்குக் கோவிலில் புனித சூசையப்பர் திருவிழாவின் முன்தின ஆராதனைகளில் தலைமை வகித்தார். அடுத்த நாளாகிய மே 1ஆம் நாள், வட்டக்கச்சியிலுள்ள தொழிலாளரின் பாதுகாவலராம் புனித சூசையப்பரின் ஆலயத்தில் திருவிழாப் பலியில் கலந்து கொண்டார்.

மே 2ஆம் நாள் கிளிநொச்சி மறைக்கோட்ட மேய்ப்புப்பணி நிலைய அங்குராப்பண நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## பூனைத்தொடுவாயில் குதூகலம்

வெத்திலைக்கேணி, கட்டைக்காடுப் பகுதியில் நடந்த இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு, அங்கிருந்து குடிபெயர்ந்து பெருந்தொகையில் பூனைத்தொடுவாய் (சுண்டிக்குளம்) பகுதியில் குடியமர்ந்த மக்களை நேர்முகமாகச் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல் அளிக்க, போக்குவரத்துச் சிரமங்கள் மத்தியிலும் ஒரு நாள் விஜயத்தைக் கடந்த புதன் 04-05-94 அன்று மேற்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## கிறிஸ்தவ சபைகளின் ஒன்றுகூடல்

எதிர்வரும் 23-05-94 திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு, 4 ஆம் குறுக்குத் தெரு, 115 ஆம் இலக்க இல்லத்தில் இயங்கிவரும் நற்சமூக நிலையத்தில் தூய ஆவியானவர் விழாவையொட்டி கிறிஸ்தவ சபைகளின் ஒன்றுகூடல் (A Pentecostal Ecumenical Gathering) இடம்பெறும்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## இறைநம்பிக்கையின் மூலம் தன்னம்பிக்கையை வளர்ப்போம்

★ கல்விப்பணிப்பாளர் செல்வி பெரியதம்பி அவர்கள்

கடந்த சித்திரைத் திங்கள் 20ஆம்திகதி முதல் 24ஆம் திகதி வரை 5 நாட்கள் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான செயலமர்வின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட வலயம் I இன் கல்விப்பணிப்பாளர் செல்வி பெரியதம்பி அவர்கள் 5 நாள் செயலமர்வும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி ஊக்குவித்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

[illegible] பிக்கையை வளர்ப்பதாகும். மற்றைய பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் சமயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையேயான நோக்கம், குறிக்கோள் ஆகியவை வேறுபாடுடையதாகவுள்ளது. மதக்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## அமைதிப்பணி தொடரட்டும்

அண்மையில் நடைபெற்ற இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை "ஈஸ்ரர்" அமர்வில் நாட்டிலுள்ள இனப்பிரச்சனை பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது. இப்பேரவையின் தலைவர் பேராயர் நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## தாய்லாந்தில் எஸ். ஜே. அடிகளாரின் உரை

ஆசிய ஆயர் மன்றங்கள் பேரவையில் இறையியல் ஆலோசனைக் குழுவால் கூட்டப்பட்ட முதலாவதுசர்வதேச இறையியல் ஒன்று கூடல் கடந்த ஏப்ரில் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை தாய்லாந்து நாட்டின் பற்றாயா என்னும்இடத்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## வியப்புக்குரிய கருவிகள்

அடுத்த ஞாயிறு மே 15 ஆம் நாள் – 'உலக சமூகத் தொடர்பு நாள்.'

'வியப்புக்குரிய கருவிகள்' என்று 2ஆம் வத்திக்கான் சங்கம் அழைத்த சமூகத் தொடர்பு சாதனங்கள் இன்று மூலைக்கு மூலை, எல்லாருடைய கைக்கும் எட்டுவதாக, எல்லா நேரங்களிலும் கிடைப்பதாகப் பலுகிப் பரவி விட்டன. ஒவ்வொருநாளும் அதிகம் அதிகமான மக்கள் தொடர்பு சாதனப் பிரசாரத்துக்கு உட்படுகிறார்கள்.

புற்றீசல் போன்ற இந்தத் தொடர்பு சாதனக் குவியல்களிடமிருந்து மக்கள் எவ்வளவோ எதிர்பார்க்கின்றனர். ஓர் இதழின் வாசகன், அல்லது வானொலி ரசிகன், அல்லது தொலைக்காட்சிப் பார்வையாளன், அல்லது திரைப்பட 'வீடியோ' விசிறி நிரம்பச் செய்திகளையும், கருத்துக் கண்ணோட்டங்களையும், சுவாரசியமான பொழுதுபோக்கையும் எதிர்பார்ப்பது இயல்பு: தன் அறிவு வேட்கையை மட்டுமல்லாது, தன் மனோ நிலைகளையும் உணர்ச்சித் தேவைகளையும் அவை திருப்திப்படுத்த வேண்டும் என்றும் அவன் எதிர்பார்க்கின்றான்.

உண்மையைப் பொய்யென்றும், நன்மையைத் தீமையென்றும் திரித்துக் கூறக் கூடிய அளவுக்கு இன்றைய தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தலாம் என்பதால், விவேகத்துடன், ஒழுக்க அளவுகோல் கொண்டு, மறையுணர்வுகளால் நிறுத்துப் பார்த்துச் சீர்தூக்கப் பழகவேண்டும்.

தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது ஓர் அரிய கலையாகிவிட்டது. ஏனைய கலைகளைப்போல, பயின்று, பயின்று கைவந்த கலையாக்கிக்கொள்ள வேண்டிய ஒரு கலை அது.

ஒரு கலையின் ரசனை என்பது எல்லோருக்கும் பொதுவான ஒன்றல்ல! கல்வி, வளர்ப்புப் பின்னணி, வயது, சூழல் போன்ற எத்தனையோ அம்சங்களுக்கு ஏற்ப அது மாறுபடக் கூடியது.

எனவே, சிறப்பாக நம் இளைஞர் பத்திரிகைகள், வானொலி, படங்கள், T. V. நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து ரசிக்க அவர்களுக்குக் கற்றுத் தரவேண்டும். எதை வாசிப்பது, எதைக் கேட்பது, எதைப் பார்ப்பது என்று தெரிவு செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்த ஆற்றல்களை வளர்க்க குடும்பத்திலும், கல்வித் திட்டத்திலும் இடம் தரவேண்டும். ஒவ்வொரு நிமிடமும் தொடர்பு சாதனங்கள் தங்கள் மாணவர்களைப் பாதிக்கின்றன என்பதால் அவர்களுக்குச் சரியான விளக்கமும் திருத்தமும் தரவேண்டிய அவசியத்தை ஆசிரியர்கள் உணரவேண்டும். பெற்றோர், ஆசிரியர், குருக்களைவிட, எந்நேரமும் மிக தாக்கமான வகையில் போதிக்கும் ஆசானாக தொடர்பு சாதனங்கள் ஆகிவிட்டன என்பதை நாம் மறக்கக் கூடாது.

தொடர்பு சாதனத் துறையில் பணியாற்றுவோர், பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர்கள் – அனைவரும் மக்களின் முழு விடுதலைக்காகவும், சமுதாயத்தில் அன்பை நிலைநாட்டவும் உழைக்கும் முன்னணி வீரர்களாகத் துலங்கவேண்டும். துன்புறுவோர், வறுமையில் வாடுவோர் முதலியோரின் பிரச்சனைகளைத் தீர்க்கவும், அவைகளைப்பற்றி மக்கள் ஆழ்ந்த அக்கறைகொண்டு பரந்த உள்ளம் கொள்ளவும் உதவ வேண்டும்.

தொடர்புசாதனங்களை நுகர்வோர், பொதுவாக மறை சம்பந்தமான செய்திகளை வாசிக்கவோ, சிந்திக்கவோ, திரைப்படம், தொலைக்காட்சி, 'வீடியோ' போன்றவற்றில் அத்தகைய நிகழ்ச்சிகளைக் காணவோ அவ்வளவு விரும்புவதில்லை. இது கவலைக்குரிய ஒரு விடயம்.

தொடர்பு சாதனங்களை அறிவுடன் பயன்படுத்துவதினால், நமது விசுவாசம் நிறைவு பெறும், நம் வாழ்வு புனிதமடையும், பண்பாடு செழுமையுறும் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

இத் தருணத்தில். வாசகர்களாகிய நாம் எவ்வளவில் நம் கத்தோலிக்க இதழ்களை ஆதரிக்கிறோம் என்பதையிட்டுச் சிந்திக்க வேண்டும். அவற்றில் கூறப்படும் கருத்துகளுக்கு நம் உணர்ச்சி பூர்வமான பதில் என்ன? ஒரு பத்திரிகையை வாசிக்காமலே அதைப் பற்றி விமர்சிக்கிறவர்கள் ஒருபுறமிருக்க, தான் வாசிப்பதை சீர்தூக்கிப்பார்த்து கடிதங்கள் வழியாகத் தன் கருத்தைத் தெரியப்படுத்தும் கண்டிப்பானவர்களை வாசகர்களுக்கு உண்டென்பதையும் மனதில் கொள்வோமாக. 'காவலனின்' காவலர்கள் வாசகர்களே!

# மீட்புச் செய்தியை அறிவிப்போம்

## 2. வாக்களிக்கப்பட்ட இரட்சகர்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அவரைப்பற்றி இறை ஏவுதலால் எழுதப்பெற்ற விவிலியத்தில் படிக்கின்றோம். இந்த நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரண்டு பகுதிகளாக உள்ளது. ஒன்று கிறிஸ்து பிறப்பிற்கு முந்தியதாகும். மற்றது கிறிஸ்துவின் காலத்தை ஒட்டியதாகும். இவ்வரலாற்றின் ஆரம்பம் முதல் இறுதிவரையிலும் கதாநாயகன் கிறிஸ்து தான்.

பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்ட யாவும் ஆச்சரியமாயிருந்தாலும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே அவரைப்பற்றி தீர்க்கதரிசிகளால் எழுதிவைக்கப் பெற்றவை.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே அவரைப்பற்றி கீழ்க்காண்பவை அறிவிக்கப்பட்டிருந்தபடி நிறைவேறின.

1, கிறிஸ்து பாவம் செய்த ஆதி மனிதனை மீட்க வருவார் என்று இறைவனால் அறிவிக்கப்பட்டிருந்தார்.

2. கிறிஸ்து பிறப்பதற்காக இறைவன் யூதா குலத்தைத் தெரிந்திருந்தார். அனுப்பப்பட இருக்கின்றவர் வரும் வரையிலும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதுமில்லை, அவனுடைய சந்ததியை விட்டு கடவுள் விலகுவதும் இல்லை (ஆதி. 49: 10). இதே போன்று இசையாஸ் தீர்க்கதரிசி கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லும் போது "உங்கள் கடவுள் வருவார். அப்போது குருடருடைய கண்கள் திறக்கப் படும், செவிடரின் காதுகள் கேட்கும் ஆற்றலை அடையும், முடவன் மான் கன்று போல் துள்ளுவான். ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியால் பாடும்" (35: 4-6) என எழுதப்பட்டிருப்பதை காணலாம்.

3. கிறிஸ்து தாவீதின் (அரச குலம்) மகன், தாவீது மன்னன் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவர். கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் பிறந்து எத்தனையோ தலைமுறை இடைவெளியிருந்தாலும் தாவீதின் மகன் என்றே அழைக்கப்படுகின்றார். லூக்காஸ் எழுதிய நற்செய்தி நூலில், "அவருடைய தந்தையாகிய தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார், அவர் யாக்கோப்பின் குலத்தின் மீது என்றென்றும் அரசாள்வார். அவரது ஆட்சிக்கு முடிவேயிராது" (1: 31-33) என்று எழுதியிருப்பதைக் காணலாம்.

4. பெத்லேகேமில் பிறப்பார்; மிக்கேயாஸ் (5: 2) இல் "பெத்லேகேமே யூதாவின் கோத்திரங்களுள் நீ மிகச் சிறியதாயிலும் இஸ்ராயேலில் ஆட்சி செலுத்தப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்" என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே குறிப்பிடப்பட்டிருக்கின்றதைக் காணலாம்.

5. கன்னியிடமிருந்து பிறப்பார்; கிறிஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னே இசையாஸ்தீர்க்கதரிசிடும் "இதோ கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவர் 'எம்மானுவேல்' என்று பெயர் பெறுவர்" (7: 14) என்று எழுதி வைத்தார். இந்த இறைவாக்கு கன்னி மரியாளிடம் கிறிஸ்து பிறந்ததால் நிறைவேறிற்று.

6. கடவுளின் ஊழியன்: கிறிஸ்துவின் வாழ்வே இதற்குச் சான்றுபகருகின்றது. மேலும் இசையாஸ் தீர்க்கதரிசி எழுதிய ஒருபகுதியில் "இதோ நமது ஊழியன், அவரை நாம் ஆதரிக்கின்றோம், அவர் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்......அவர்மேல் நம்முடைய ஆவியைத் தங்கச்செய்தோம். அவர் உலகில் அறத்தை நிலைநாட்டும் வரை மனம் தளர மாட்டார்" (42:1-4) இவ்வாறு கிறிஸ்து வர்ணிக்கப்படுகின்றார்.

7. நல்லஆயனாக இருப்பார்: இசையாஸ் தீர்க்கதரிசி "இதோ ஆண்டவர் வல்லமையோடு வரப்போகின்றார், அவர் தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளை அன்போடு எடுத்து அரவணைப்பார்" என எழுதியதை அருளப்பர் 10 அதி. 11-18 இல் நல்ல ஆயனின் பண்புகள் கிறிஸ்துவின் பண்புகளாக வெளியிடப்பட்டதைத் தெளிவுபடுத்துகின்றார்.

8. உலகின் ஒளி: இசையாஸ் தீர்க்கதரிசி "யெருசலேமே எழுந்திரு ... எழுந்து ஒளி வீசு... உன் வெளிச்சம் இருள் நடுவில் உதயமாகும்" (6ப: 1-2)என்று வர்ணித்தார். கிறிஸ்துவும் "நானே உலகின் ஒளி என்னைப் பின்செல்பவன் இருளில் நடவான் என்று தம்மைப்பற்றி அறிவித்தார்(அரு. 8:12).

9. அபிஷேகம் பெற்றவராவார்: இசையாஸ் தீர்க்கதரிசி எழுதிய ஏட்டை செபக்கூடத்தில் கிறிஸ்துவே வாசித்து "ஆண்டவர் ஆவி என்மேலே, ஏனெனில் ஆண்டவர் என்னை அபிஷேகம் செய்தார். எளியோருக்கு நற்செய்தி சொல்ல

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

# தொலைக்காட்சி குடும்பநலனைப் பேணுவதாக அமையவேண்டும்



பல்வேறு விதமான இல்லாமைகளால் வாழ்க்கை வெகுவாகப் பாதிப்படைந்துள்ள இக்காலத்திலே, திருத்தந்தை ச. தொ. க. நாளுக்கான செய்தியில் 'தொலைக்காட்சி குடும்ப நலனைப் பேணுவதாக அமையவேண்டும்' என்று அறைகூவல் விடுக்கிறார்.

ச. தொ. கருவிகளின் வளர்ச்சியினாலும் பாவனையாலும் உலகம் சுருங்கி மனித இனம் நெருங்கி வரும் அதே வேளையில் எமது பகுதிகளில் இப்போதைய சூழ்நிலையில் ச. தொ. கருவிகளின் பயன்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது. அவை கூட சுதந்திரமாகச் செயற்படுகின்றனவா என்பதும் கேள்விக்குறியே.

எமது பகுதிகளிலேஇடத்துக்கிடம் இன்று வசதியேற்படும் போதெல்லாம் தொலைக்காட்சிப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. பொதுவாக எல்லா வயதினரும் ஒன்று சேர்ந்து பார்ப்பது வழக்கமாயுள்ளது. எவ்விதமான படங்கள் காண்பிக்கப்படுகின்றன என்பதை முன்கூட்டியே அறிவதுடன், குடும்பமாகக் கூடியிருந்து பார்த்த படங்களை விமர்சித்து, சரியான விழுமியங்களை உள்வாங்கிக் கொள்ளவும் வழிமுறைகள் தேட வேண்டும்.

தொலைக்காட்சிப்படங்களால் குடும்பங்களில் ஏற்படக்கூடிய நன்மைகள் தீமைகள் பற்றி திருத்தந்தை தமது செய்தியில் தெளிவாக்கியுள்ளார். இன்றைய சூழலில் அவற்றை மனதிற் கொண்டு செயற்படுவது குடும்பவாழ்வு நலம்பெறத் துணை செய்யும்.

தொலைக்காட்சித் துறையில் பணி செய்வோர் அனைவரும் பணத்தை மட் தமது குறிக்கோளாகக் கொள்ளாது, குடும்ப நலனில் அக்கறை கொண்டு, பொறுப்புடன் செயற்பட முற்பட வேண்டும். பாலியல் சார்ந்தவை மட்டுமல்ல, வன்முறை சார்ந்த படங்களும் காட்சிகளும் கூட எதிர்மறையான வாழ்க்கை முறைக்கு குறிப்பாக இளைஞர்களை இட்டுச் செல்லலாம் என்பதை மனதிற் கொள்வது நல்லது.

பல்வேறு நிலைகளில் எமது திருச்சபை புதுப்பிக்கப்பட வேண்டும் என ஆழமாக உணர்கின்ற நாம், ச. தொ. கருவிகளின் சரியான பயன்பாட்டிலும் பொதுநிலையினர் எமது பொறுப்பை உணர்ந்து செயற்படுவதனால் குடும்பங்கள் இன்றைய பல்வேறு தாக்கங்களின் மத்தியிலும் வளர்ச்சியடைய வாய்ப்புக் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை.

பங்குகளிலும், கிராமங்களிலும் உள்ள வெவ்வேறு குழுக்களும், மன்றங்களும் கூட படங்களைத் தெரிவு செய்வதிலும் அவற்றைப் பார்க்க உதவி செய்வதிலும் பார்த்த படங்களை விமர்சிப்பதிலும் முயற்சிகள் மேற்கொள்வது பயனளிக்கும்.

இறை ஆசீர்

அன்ரன் மத்தாயஸ்
மறைமாவட்ட இயக்குனர்
சமூகத்தொடர்புக் கருவிகள்
ஆணைக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பரசரின் செய்தி:

# 28வது உலக தொடர்பு சாதன தினம் — மே 15, 1994



தொலைக்காட்சி குடும்ப வாழ்வை வளம்படுத்த முடியும். குடும்ப அங்கத்தினரிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்துவதுடன் அது பிற குடும்பங்களுடனும் சமுதாயத்துடனும் ஒருமைப்பாட்டைப் பேணவும் துணை புரியலாம். அவர்களது பொது அறிவை மட்டுமல்ல, சமய அறிவையும் விருத்தி செய்து, இறை வார்த்தையைக் கேட்கவும், தமது சமய தனித்துவத்தை உறுதிப்படுத்தவும், தமது ஒழுக்க, ஆன்மீக வாழ்வை பேணிக்காக்கவும் வழி செய்கின்றது.

தொலைக்காட்சி குடும்பவாழ்வுக்குத் தீங்கும் இழைக்கலாம். இழிந்த மதிப்பிடுகளைப்பரப்புவதனாலும், இழிந்த நடத்தைகளை முன்மாதிரியாகக் காட்டுவதனாலும், ஆபாசமானவற்றை ஒளிபரப்புவதனாலும், கொடிய வன்செயல்களைத் தத்ரூபமாகக் காட்டுவதனாலும், அறநெறியில் இடைவீத நிலையையும் சமயத்தில் ஐயுறவையும் மனதில் பதியச் செய்வதாலும், சமகால நிகழ்வுகளையும் பிரச்சினைகளையும் பற்றிய செய்திகளை திரித்து தமக்கேற்றபடி வெளியிடுவதனாலும், மக்களின் இழிந்த இயல்பூக்கங்களைத் தூண்டக் கூடியதான சுயலாபம் கருதும் விளம்பரங்களாலும், பரஸ்பர மதிப்பு, நீதி சமாதானம் ஆகியவற்றை அடைவதற்குத் தடையான விதத்தில் வாழ்வைப்பற்றிய பொய்த்தோற்றங்களை பெருமைப் படுத்துவதனாலும் தீங்கிழைக்கப்படலாம்.

இச்செய்தியில் நான் பெற்றோரினதும், தொலைக்காட்சித் தொழிலில் ஈடுபட்டுள்ளோரினதும், அரசாங்க அதிகாரிகளினதும், திருச்சபையில் மேய்ப்பு, கல்விப்பணிகளில் ஈடுபட்டுள்ளோரினதும் பொறுப்புக்களை நன்கு புலப்படுத்த விரும்புகிறேன், அறநெறியிலும் சமுதாயத்திலும் புதுப்பிக்கும் தமது பணியை மேற்கொள்வதற்கு துணைபுரிவதில் தொலைக்காட்சியை ஒரு சிறந்த சாதனமாக ஆக்கும் சக்தி இவர்கள் கையிலேயே உள்ளது.

''தமது பாலப் பருவத்திலேயே உண்மையைத் தேடவும், உண்மைக்கேற்ப வாழ்வும், நன்மையைத் தேடி அதனை மேம்படுத்தவும்'' தமது பிள்ளைகளுக்குத் துணைபுரியும் பாரிய பொறுப்பைக் கடவுள் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளார். (1991 உலக சமாதான தினத்தின் செய்தி) ஆகவே ''உண்மை எதுவோ, கண்ணியமானது எதுவோ, நீதி எதுவோ, தூயது எதுவோ, இனியது எதுவோ, எதெல்லாம் நற்பண்புடையதோ'' (பிலிப். 4: 8) அவற்றையெல்லாம் போற்ற தமது பிள்ளைகளுக்கு வழி காட்டுவது அவர்களது கடமையாகும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தை பெற்றோர் முன்கூட்டியே அறிந்து குடும்பத்தின் நலனைக் கருதி ஒன்றைப் பார்ப்பதா வேண்டாமா என்று தீர்மானித்தல் வேண்டும். தொலைக்காட்சி பெற்றோர் தம் பிள்ளைகளோடு கலந்தாராய்ந்து, பார்க்கும் நேரத்தையும், நிகழ்ச்சிகளின் தன்மையையும் வரையறை செய்து கொள்ளவும், குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின் அறநெறி மதிப்பீடுகளைக் கண்டுணர்ந்து தேர்ந்துகொள்ளவும் வழிகாட்டுதல் வேண்டும்.

பிள்ளைகளின் தொலைக்காட்சி பார்க்கும் பழக்கத்தை ஒழுங்குபடுத்தும்போது சில வேளைகளில் அதனை அனைத்துவிட வேண்டியும் நேரலாம். ஏனெனில் செய்வதற்கு அதைவிட நல்ல காரியங்கள் இருக்கலாம், அல்லது ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் நலனைக் கருதவேண்டியிருக்கலாம். அல்லது வரையறையின்றி தொலைக்காட்சி பார்ப்பது தீங்குபயக்கலாம்.

பெற்றோர் தமது நியாயபூர்வமான கருத்துக்களை தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கும் மேலாளர்களுக்கும் தெரியப்படுத்துதல் வேண்டும்.

தொலைக்காட்சித் துறையில் ஈடுபட்டுள்ளோராகிய அதிகாரிகள், மேலாளர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், எழுத்தாளர்கள் முதலியோர் தாம் தொழில்புரியும் தொடர்பு சாதனம் எவ்வளவு செல்வாக்குடையது என்பதை யுணர்ந்து சிறந்த அறநெறி, ஆன்மீக மதிப்பீடுகளைப் பேணுவதோடு, குடும்பத்தின் வாழ்வு, உறுதிநிலை, சமநிலை மகிழ்ச்சி ஆகியவற்றுக்குத் தீங்கிழைக்கக்கூடிய யாவற்றையும் தவிர்க்கவேண்டும்.

குடும்ப வாழ்வுக்கு ஆதாரமாகவுள்ள மனித, சமய மதிப்பீடுகளைப் பேணக்கூடியதாக நிகழ்ச்சித் தயாரிப்பில் தக்க நன்னெறித் தாக்கங்களைக் கையாளுமாறு வலியுறுத்தும்படி அரச அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது.

தொலைக்காட்சியும் ஏனைய தொடர்பு சாதனங்களும் குடும்பத்தில் ஐக்கியத்தையும் ஏனைய குடும்பங்களோடு ஒருமைப்பாட்டையும், சமுதாயத்திற்கு சேவைபுரியும் மனப்பான்மையும் பேணி நிலைநாட்டுவதில் அதி சக்திவாய்ந்த கருவிகளாயுள்ளன,

## தொலைக்காட்சியால் ஏற்படும் நன்மை - தீமைகள்

தொலைக்காட்சியால் குடும்பவாழ்வுக்கு ஏற்படக்கூடிய நல்ல விளைவுகள்:

1. அனைவரும் பங்குகொள்ளும் குடும்ப அனுபவம்.
2. பங்குகொள்ளப்பட்ட அனுபவத்தில் பிற குடும்பங்களுடன் ஒருமைப்பாடு.
3. அறிவு விருத்தி.
4. அயலில் உள்ள சமுதாயத்தினதும், உலகில் பிற இடங்களில் உள்ளவர்களதும் தேவைகளை உணர்ந்துகொள்ளல்
5. ஆழமான சமய உணர்வும் அறிவும்
6. அறநெறிபற்றிய விடயங்களில் முதிர்ச்சியான, பொறுப்புள்ள பகுத்துணர்வு
7. சமய விசுவாசத்தினதும் அனுசாரத்தினதும் பொதுத்தன்மையையும் கத்தோலிக்க திருச்சபையின் ஒருமைப்பாட்டையும் அனைத்துலக தன்மையையும் உணர்ந்து கொள்ளுதல்.

தொலைக்காட்சியால் குடும்பத்துக் ஏற்படக் கூடிய தீய விளைவுகள்

1. தனிப்பட்ட முயற்சி, படிப்பு ஆகியவற்றிற்குப் பதிலாக தொலைக்காட்சியைப் பயன்படுத்துவது.
2. உரையாடல், குடும்பசெபம், விளையாட்டு போன்ற ஆட்களுக்கிடையிலான செயற்பாடுகளுக்குப் பதிலாக தொலைக் காட்சியைப் பயன் படுத்துவது.
3. உண்மை நிலை, பொறுப்பு ஆகியவற்றிலிருந்து துண்டிக்கப் படுவது
4. தொலைக்காட்சியில் காணும் கருத்துப்படிவங்களையும் செய்திகளையும் மதிப்பீடுசெய்யாது அப்படியே ஏற்றுக் கொள்வது.
5. ஆபாசம் அல்லது வன்முறை சார்ந்த கருத்துப்படிவங்களை வீட்டில் புகவிடுவது.
6. மிதமிஞ்சிய பொருட்பயன்பாட்டையும், உலோகாயத மனப்பாங்கினையும் அனுமதித்தல்.
7. தப்பெண்ணங்களை அல்லது மாறாநிலைகளை மேற் கொண்டு வலியுறுத்துதல்.

## யாழ். மேய்ப்புப்பணி மாநாட்டுத் தொடர் செயற்பாடுகள்

பரிசுத்தஆவியின் விழா திருச்சபை புதுப்பிறப்படைந்த நாளாகும்.

யாழ். மேய்ப்புப்பணி மாநாடு எமக்கு ஒரு பெந்தக்கோஸ்த் நிகழ்வு. ஆவியின் ஒளியைப் பெற்ற நாம் ஆக்கபூர்வமான முறையில் செயற்பட அழைக்கப்பட்டுள்ளோம். என்பதை பரிசுத்த ஆவியின் விழா எமக்கு நினைவூட்டுகின்றது. எனவே நாம் ஆவியால் உந்தப்பட்டு எம்முடைய சீடத்துவ அழைப்பை ஏற்று, செயல்படத்தொடங்குவோம். பரிசுத்தஆவியின் விழா மீண்டும் எம்மைப் புதுப்பித்துக் கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பம் ஆகும். புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக நாம் மாறுவதற்கு தூய ஆவியின் துணையை நாடி நிற்போம். தூயஆவி எம்மை எங்கு அழைக்கின்றாரோ அங்கே துணிவோடு நாம் செல்லவும், எவ்வித சேவையாற்ற நாம் பணிக்கப்படுகின்றோமோ அதனைச் செய்யவும் நாம் ஆயத்தமாயிருப்போம்.

மேய்ப்புப்பணி மாநாட்டின் பின்— நடைபெற்ற தொடர் ஆய்வுக் கூட்டங்களில் பின்வரும் செயற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டன.

1. எதிர்வரும் பரிசுத்தஆவியின் விழா- மேய்ப்புப்பணி மாநாட்டில் முதன்மையானவை என்று பலரும் இணக்கம் தெரிவித்த விடயங்களை, செயல்முறைப்படுத்த ஆரம்பிக்கும் ஒரு அரிய நாள்.

இதற்காக பரிசுத்தஆவியின் விழாவிற்கு தகுந்த ஆயத்தம் செய்ய திரிதின வழிபாடுகள் பங்குகள் தோறும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

2. மேய்ப்புப்பணி மாநாட்டில் எதிரொலித்த சில முக்கிய விடயங்களை இறைவார்த்தை ஒளியில் சிந்தித்து செயல்படுத்த ஞாயிறு வழிபாடுகளை அதற்கேற்ப அமைத்தல்.

அவை பின்வருமாறு:

(i) 29.05.94 திரித்துவப் பெருவிழா
கிறிஸ்தவ குழும வாழ்வு
(ii) 12.06.94 இறைவார்த்தையும் குழும வாழ்வும்
(iii) 26.06.94 திருவழிபாடும் குழும வாழ்வும்
(iv) 10.07.94 குடும்பமும் குழும வாழ்வும்.
(v) 24.07.94 பங்கும் குழும வாழ்வும்
(vi) 07.08.94 நீதி சமாதானமும் குழும வாழ்வும்
(vii) 21.08.94 குருக்கள் துறவியரின் குழும வாழ்வு

மேற்கூறப்பட்ட தலைப்புக்களை குறிப்பிட்ட நாளில் எடுக்க முடியாதெனில் வேறொரு ஞாயிறு தினத்தை அதற்குப் பயன்படுத்தலாம். வசதியிருக்குமாயின் 2 வாரத்திற்கும் தொடர்ந்து ஒரே தலைப்பை சிந்தனைக்கு எடுக்கலாம்.

3. ஆலய விழாக்களில் நடைபெறும் மறை உரைகளில் இத்தலைப்புக்களிற்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகப் பயனுள்ளதாய் அமையும்.

4. மேலும் இத்தலைப்புக்களை மையமாகக் கொண்டு பங்கு மட்டத்தில் கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள் போன்றவற்றையும் நடாத்தலாம் மறைக்கல்வி வேதாகம வகுப்புக்களிலும் இத்தலைப்புக்களிற்கு முக்கியத்துவம் கொடுப்பது சிறந்தது.

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்
பொதுச் செயலர்,

## மீட்புச் செய்தி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தி சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும் கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியும் அறிவிக்க ஆண்டவர் என்னை அனுப்பினார், அது இன்று நிறைவேறிற்று'' என்று அறிவித்தார். (லூக். 4: 13-19).

10. துன்புறும் மனிதன்: இசையாஸ் தீர்க்கதரிசியின் வசனங்களில் ''அவர் துன்புறும் மனிதனாய்த் துயரத்தில் வாழ்ந்தவராயிருந்தார், கண்டோர் கண்மறைத்து அருவருக்கும் ஒரு மனிதனைப் போல் அவர் இகழப்பட்டார்'' என்று காணப்படுகின்றன. கிறிஸ்துவின் வாழ்வின் இறுதியில் அவர் சிலுவை மரத்தில் தொங்கும் போது இவை நிறைவேறியதைக் காணலாம்.

11. இறைவனின் செம்மறியாய், நம் பாவங்களின் பலியானார்: மனிதன் செய்த பாவங்களுக்கெல்லாம்பரிகாரப் பலியாக தன்னையே கையளிக்கும் தியாக உருவாகக் கிறிஸ்து இருந்தார். இசையாஸ் தீர்க்கதரிசி எழுதியதில் நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார், நம் அக்கிரமங்களுக்காகவே நொறுக்கப்பட்டார். (52: 13-53 : 3) என்பதை இங்கு காண்கின்றோம். எனவே எங்கள் பாவங்களுக்காகக் கிறிஸ்து பலியானார்.

12. உலகின் மீட்பர்: ஆதியில் மீட்பரை அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்தார். அது கிறிஸ்துவில் நிறைவேறிற்று. இதையும் இசையாஸ் தீர்க்கதரிசி, ''ஆண்டவர் தம் பரிசுத்த கைவன்மையைக் காட்டினார். உலகின் கடைகோடி நாடுகள் எல்லாம் நம் கடவுள் தரும் மீட்பைக் காணப் போகின்றன'' (52: 2 : 10) என்று வர்ணித்தார்.

## சூறாவளி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின் அடுத்த இரு நாள்களும் மறையாசிரியர்க்கான பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றியதுடன் மறைக்கோட்டத்திலுள்ள மற்றும் பங்குகளை ஆயர் தரிசித்தார். மே 5 ஆம் திகதி, கிளிநொச்சி மறைக்கோட்டக் குருக்களுக்கான ஒருநாள் ஞானவொடுக்கத்தை நெறிப்படுத்தினார். மறுநாள் 6ஆம் திகதி உருத்திரபுரத்தின் பத்திமாதா ஆலய விழாவிற்கான கொடியேற்ற வைபவத்தில் ஆயர் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காத்திருப்போம்..."

★ லொறற், யாழ். குருத்துவக் கல்லூரி,

எமது மறைமாவட்டத்தின் ''புதுப்பித்தலுக்கான'' மேய்ப்புப்பணி மாநாடு வெற்றிகரமாக முடிவடைந்து இரண்டு மாதங்கள் நிறைவடைகின்றன. எமது திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் புதிய தரிசனம் (பார்வை) கண்டு பிடிக்கப்பட்டு விட்டது புதுப்பித்தலுக்கான திட்டங்களும் அமைப்புக்களும் போடப்பட்டு விட்டன. உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய, செய்யப்படவேண்டிய பணிகளும் தெரிவு செய்யப்பட்டு விட்டன. கதைத்த காலம், கலந்துரையாடுகின்ற காலம், விவாதிக்கின்ற காலம் எல்லாம் முடிந்து விட்டது. எல்லாம் கதைத்து கலந்துரையாடி, பட்டறைகளில் போட்டு அடித்து, விவாதித்து பின்பு வாக்களித்து முடிவுகளும் எடுக்கப்பட்டு விட்டன.

இப்போதோ அவற்றைச் 'செய்யும் காலம், செயற்படுத்த வேண்டிய காலம்'. அதனால்தான் சற்று தாமதமாக இருக்கின்றது, கஸ்ரமாக இருக்கின்றது எதைச் செய்ய வேண்டும் என்று தெரிந்தாலும், எப்படிச் செய்ய வேண்டும் என்றும் சிலவேளை தெரிந்தாலும் அதைச் செய்யும், செயற்படுத்தும் திறனும், துணிவும், உறுதியும் குறைவாகவே இருக்கின்றது. செய்ய வேண்டியதைச் செய்வதற்கு பயமும் தயக்கமும் துணிவின்மையும் காணப்படுகின்றது. நாம் போட்ட திட்டங்கள், அமைப்புக்கள் எல்லாம் உயிரற்ற உடல்போல இருக்கின்றன.

**இப்போது என்ன தேவை ?**

இன்றைய எமது யாழ்த் திருச்சபையின் மிகவும் முக்கியமான தேவை என்ன ? அந்தோனி டி மெல்லோவுடைய வார்த்தைகளில் சொல்வதானால், ''பரிசுத்த ஆவி இல்லையெனில் இவை அனைத்தும் உயிரற்ற உடல் போன்றதே. எங்களுடைய கல்லான இதயங்களை எடுத்துவிட்டு கனிவான, உணர்வுள்ள இதயங்களை தரக்கூடிய ஒருவரே நமக்கு அவசியம் தேவை. ஆர்வமும், ஊக்கமும் துணிவும் ஆன்மீக பலமும் புதிதாக எமக்கு ஊட்டப்படவேண்டும். சலிப்பும் களைப்பும் இன்றி எமது வேலைகளில் தொடர்ந்து ஈடுபடவும், எதிர்காலம், நாம் பணி செய்ய விரும்புகின்ற மக்கள் போன்றவை மட்டில் புதிய விசுவாசமும் நம்பிக்கையும் எம்மில் நிலைத்திருக்கவும் எமக்கு புதிய பலம் வேண்டும். எமக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை புதிதாகப் பொழியப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவரினால் ஆட்கொள்ளப்பட்ட ''மனிதர்கள்'' எமக்குத் தேவை.''

**அப்படியானால்......... என்ன செய்ய வேண்டும் ?**

பரிசுத்த ஆவியானவர் தந்தையுடைய உன்னதமான ஒரு கொடை. நமது சொந்த செயற்பாடுகள், வல்லமைகளினால் அவரை பெற்றுக் கொள்ள முடியாது. காற்றைப் போல அவர் தாம் விரும்பிய திசைக்கு வீசுவார்.

''நீங்கள் ஜெருசலேமை விட்டு நீங்காமல் தந்தை வாக்களித்ததை எதிர்பாருங்கள்'' (அப். பணி. 1,4-5) இது தான் ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள செய்யவேண்டியது. இதுவே இயேசுவின் வேண்டுகோளும் கூட. எதிர்பார்த்திருத்தல்...... காத்திருத்தல்...... இதுதான் நாம் செய்ய வேண்டியது. நவீன உலகத்திலே சிறிது நேரம் ஓய்வாக, அமைதியாக இருப்பது எமக்கு கடினமானது. கடவுளுக்காக எவ்வளவு நேரமும் ஓடி ஆடித் திரிந்து வேலைகள் செய்வோம், ஆனால் சிறிது நேரம் அமைதியாக செபத்திலே காத்திருக்க, விழித்திருக்க, எதிர்பார்த்திருக்க எமக்கு முடியாது—கடினமானது ''ஜெருசலேமை விட்டு நீங்காமல் தந்தை வாக்களித்ததை எதிர்பாருங்கள்'' எனவே செபத்திலே காத்திருப்பதுதான், எதிர்பார்த்திருப்பதுதான் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள ஒரே ஒரு வழி. நாளாந்தம் கடவுளுக்காக, அவரது ஆவியின் பொழிவுக்காக காத்திருப்பவர்களுக்கு மட்டுமே ஆவியானவர் கொடுக்கப்படுவார். நாளாந்தம் செபத்திலும் இறைவார்த்தையை தியானிப்பதிலும் கடவுளுக்காக நேரத்தை ''விரயமாக்குபவர்களுக்கே'' அவர் கொடுக்கப்படுவார்.

சீடர்கள் அறையிலே செபத்தில் காத்திருந்தது போல், நாமும் தூய ஆவியின் வருகைக்காக காத்திருப்போம். 'பெந்தகோஸ்தே' விழாவின் போது தூய ஆவியானவர் அக்கினி நாவு வடிவில் சீடர்கள் மேல் இறங்கி அவர்களுக்கு புத்துயிரும் சக்தியும் அளித்தது போல, யாழ்த்திருச்சபையிலேயும் 1994 ஆம் ஆண்டு பெந்தகோஸ்தே விழா தனிப்பட்ட எம் ஒவ்வொருவருடைய வாழ்விலும், திருச்சபையின் வாழ்விலும் புத்துயிர் அளிப்பதாக அமைய செபத்தில் விழிப்புடன் காத்திருப்போம். திருச்சபையின் ''பிறப்பு விழா'' வான பெந்தகோஸ்தே விழா, யாழ்த் திருச்சபையிலும் (தனிப்பட்ட மற்றும் திருச்சபையின் வாழ்விலும்) ''புதுப்பித்தலின் பிறப்பு விழாவாக'' அமையட்டும்.

சீடர்களுக்கு ஆவியானவர் தேவைப்பட்டது போல, மேய்ப்புப்பணி மாநாட்டின் பின்பு எமது புதிய கண்ணோட்டங்கள், தரிசனம், திட்டங்கள் அமைப்புக்கள், பணிகள் நடைமுறைப் படுத்தப்பட ''உந்துசக்தி'' தேவை. எல்லாவற்றிலும் மேலாக நாம் எதிர்பார்க்கும் ''புதுப்பித்தல்'' எம் ஒவ்வொருவரிலும், திருச்சபை முழுவதிலும் ஏற்பட புதுப்புனலாகிய ஆவி தேவை. புதுப்பித்தலை பரப்ப ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் தேவை. ஆகவே 1994 ஆம் ஆண்டு வைகாசி 22 ஆம் நாள் பெந்தகோஸ்தே விழாவில் தூய ஆவியின் வருகைக்காக, அவருடைய புதுப்பிக்கும் வல்லமையின் விசேட பொழிவுக்காக விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் செபத்திலும் தியானத்திலும் காத்திருப்போம்...... காத்திருப்போம்...... காத்திருப்போம்......

# பாப்பரசரின் இலங்கைத் திருப்பயண நிகழ்வுகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலம் வந்து, மாலை 6 மணியளவில் கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் குருக்கள், துறவியர், பொது நிலையினர்க் குழுக்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்திப்பார் அதனைத் தொடர்ந்து கொழும்பு பேராயர் இல்லத்தில் 7 மணிக்கு இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை ஆயர்களைச் திருத்தந்தை சந்திப்பார். இந் நிகழ்வில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் திருத் தந்தையை ஆயர்கள் பெயரால் வரவேற்பார்.

மறுநாள் 21ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு சிறீலங்கா ஜனாதிபதியைத் திருத்தந்தை ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பார், அதன் பின்னர் காலை 9 மணிக்கு, காலி முகத்திடலில், இறையடியார் யோசேவ் வாஸ் முனிவரை முத்திப்பேறு பெற்றவர் எனப் பிரகடனப்படுத்தி, திருப்பலி நிறைவேற்றுவார். இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பல லட்சக்கணக்கான மக்கள் சரித்திர வரலாறு படைக்கும் இவ்வைபவத்தில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

அன்று பிற்பகல் 12.15 மணிக்கு பல்வேறு மதத்தலைவர்களைத் திருத்தந்தை சந்திப்பார். மதியபோசனத்தின் பின், 2.45 மணிக்கு வத்திக்கானுக்கான இலங்கைப் பிரதிநிதியின் இல்லத்தில் இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஸ்தானிகர்களை வரவேற்று அவர்களுடன் உரையாடுவார். அங்கிருந்து 3.30 மணிக்கு உலங்கு வானூர்தியில் கட்டுநாயகாவுக்குச் சென்று, 4.10 மணிக்கு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு தனது திருப்பயணத்தை தொடர்ந்து மேற்கொள்வார் திருத்தந்தை.

திருத்தந்தையின் மேற்படி விஜயத்தையொட்டிய சகல ஏற்பாடுகளையும் செய்வதற்கு 9 உப குழுக்கள் கொண்ட ஒரு செயற்குழு கொழும்புத் துணை ஆயர் மல்கம் றஞ்சித் தலைமையில் இயங்குகிறது. அரசாங்க மட்டத்தில் இயங்கும் குழு திரு. தனபாலா அவர்களதும் அமைச்சர் யோண் அமரதுங்கா அவர்களினதும் பொறுப்பில் உள்ளது

சிறிலங்கா அரசு இச்சந்தர்ப்பத்தையொட்டி, யோசேவ் வாஸ் முனிவரினதும் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரினதும் உருவப்படங்களைக் கொண்ட இரு தபால் முத்திரைகளை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

திருத்தந்தையின் இலங்கைத் திருப்பயணம் எவ்வித இடையூறுமின்றி வெற்றிகரமாக நிறைவு பெற வேண்டுமென்று எல்லா இறைமக்களும் இறைவனைப் பிரார்த்திக்குமாறு ஆயர் பேரவை கேட்டுக்கொள்ளுகின்றது.

# மண்ணில் வேரூன்றி வளரும் கிளிநொச்சி மறைக்கோட்டம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபம், கிளை அலுவலகங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய இப்பாரிய அமைப்பை, இந்த போர்க்கால சூழல்கள் மத்தியிலும் எமது சக்திக்கு ஏற்றவகையில் திருத்தி அமைத்தும், உள்ளூர் உற்பத்திகளைக் கொண்டு சீர்அமைத்தும் இப் பணி மனையை கட்டி முடித்தமையை எல்லோரும் மனதார பாராட்டினார்கள்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து, ஆயர் தலைமையில் நிறைவேறிய கூட்டுத் திருப்பலியில், மறையுரை ஆற்றிய ஆயர் அவர்கள், ''நற்செய்தி பணியாற்றுவோர் அறிவில் மட்டும் அல்ல, ஆன்மீகத்திலும் சிறந்து வளர்ந்து ஓங்க வேண்டியவர்கள்'' எனக் குறிப்பிட்டார்.

திருப்பலியைத் தொடர்ந்து ''3 மாத மறை ஆசிரியர் பயிற்சி'' வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது. தலைமையுரை ஆற்றிய ''மறைக்கோட்ட முதல்வர்'' அதிவண. ம. இ. பயஸ் அடிகளார் ''இம்மறைக் கோட்டத்தின் நீண்ட நாளைய கனவு இன்று நனவாக இருப்பதற்குக் காரணம், எம் மறைக் கோட்டத்திலுள்ள, குருக்களின் ஒத்துழைப்பும், ஆயர் அவர்களின் பேருதவியுமே'' என்று மனம் திறந்து பாராட்டினார். இன்னும் ''இந்நிலையமானது திருச்சபையின் போதனைகளை பிழை அறக் கற்றுக் கொடுப்பதற்குத் தகுந்த பயிற்சியாளர்களை உருவாக்கி, எமது மறைக்கோட்டத்திற்கு, அளிப்பதே இந்நிலையத்தின் நோக்கம்'' என்றார்.

சிறப்புரைஆற்றிய ''மறைக் கல்விப் பொறுப்பாளர்'' அருள் திரு. R.C.X. நேசராஜா அடிகளார், ''புதுப்பித்து பகிரும் திருச்சபையாக'' தன்னை வரித்துக்கொண்ட யாழ். திருச்சபை இன்று அதை செயலளவிலே நடை முறைப்படுத்த முன் வந்து இருப்பது பெருமைப்பட வேண்டியதே! நல்ல ஒரு நோக்கத்திற்காக கட்டி எழுப்பப்பட்ட இந்நிலையமானது அந்த நோக்கத்திலே நிலைத்து நின்று தொடர்ந்து பல நல்ல உள்ளங்களை உருவாக்கித் தரவும், நாம் அனைத்திற்கும், யாழ்ப்பாணத்தைமட்டும் நம்பி இராது, நமது சொந்தக் காலில் துணிந்து நிற்பதற்குகைகொடுத்து உதவுமாறு ''விரிவுரையாளர்களுக்கு'' வேண்டுகோள் விடுத்து நின்றார்.

பயிற்சியாளர்கள் சார்பில் உரையாற்றிய செல்வி எம். புனிதமலர், ''2ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியிலே தன்னைப் புதுப்பித்து, பகிர புறப்பட்ட யாழ். திருச்சபை இன்று பொது நிலையினரின் முக்கியத்துவத்தினை நன்கு உணர்ந்து, எமது கிளிநொச்சி மண்ணிலே வேரூன்றி, எம்மை வளர்த்து எடுக்க முன்வந்துள்ளது எமது மண்ணின் வரலாற்றிலே மறக்கமுடியாத ஒன்று'' என்றார்.

ஆசியுரை வழங்கிய ஆயர் தமது உரையில், ''இது எமது குருக்களின் நீண்ட நாளைய ஏக்கம் என்றும், நாம் ஆயராகப் பொறுப்பேற்று, யாழ். மண்ணுக்கு வரும் வழியிலேயே இங்குள்ள குருக்களால், தம்மிடம் கேட்கப்பட்ட முதல் வேண்டுகோள். இதுவே என்றும், இதன் வளர்ச்சிக்கு தனது ஆசீரும், வேண்டுதலும் என்றும் உண்டு'' எனவும் உறுதி கூறினார்.

விழா முடிவில் ''புதுக் களம் அமைத்து'' என்ற குறியீட்டு நாடகமும், ''நல்லாயன்'' நாட்டிய நாடகமும்இடம்பெற்றன. அனைவருக்கும் நன்றி தெரிவித்து, நிலையத்து உதவி இயக்குனர் C. J. அன்ரனி பாலா அடிகளார் பேசியதைத் தொடர்ந்து மதிய உணவுடன் 'பயிற்சிகள்' ஆரம்பிக்கப்பட்டன.

— எஸ். ஏ. நாதர்

# தாய்லாந்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் உள்ள நிடம்ரோறிஸ்ற் நிலையத்தில் நடை பெற்றது. இந்த ஒன்று கூடலின் போது அருட் தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் ''ஆசியாவில் திருச்சபையும் அரசியலும்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

இந்த ஒன்று கூடலில் தான் முதன் முதலாக ஆசிய நாடுகளில் இருந்து மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அருட் தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் கடந்த பல வருடங்களாக ஆசிய ஆயர் மன்றங்கள் பேரவையின் (FABC) இறையியல் ஆலோசகராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்தவ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வண G. N. ஆனந்தராஜன் M. Th. அடிகளார் ''பழைய ஏற்பாட்டுப் போர்களை நியாயப்படுத்தல்'' (''Justification of wars in the O. T.'')எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார். இக்கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் அருள்திரு S.J. இம்மானுவேல் அடிகளார் எல்லோரையும் இக்கூட்டத்தில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 8 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 8 | எம் வாழ்வின் வழி யேசு |

### படிப்புதிர் 3

படி (1) ............... மாதம் செபமாலை மாதாவின் மாதம்
(2) மருத ............'விலே திருப்பதி கொண்டு தேவ அருள் பொழிகின்ற செபமாலை மாதாவே
(3) ............... தீவிலே ஆரம்பமாகிப் பலநாடுகளில் கீர்த்தி பெற்று விளங்கி வருகின்ற சதாசகாய மாதாவே
(4) ................. மிகுதியாற் சகல வேதசாட்சிகளை விட அகோரவேதனை அனுபவித்த மாதாவே
(5) தேவதாயின் தந்தையின் பெயர் ....................
(6) தேவதாயின் தாயின் பெயர் ..........................
(7) "..................யின் அமைப்பு முறை மிகச் சிறந்த தொன்றாகும்'' திருத்தந்தை 23ஆம் அருளப்பர்.
(8) தேவதாயிடம் அற்புத வரவணிக்கம் பெற்ற புனிதையின் பெயர் ..............................
(9) ஓ என் யேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத் தருளும் எங்களை நரக நெருப்பிலிருந்து ......... ...
(10) செபமாலைத் தியானம் ............ செபம் என்றும் அழைக்கப்படும்;

**செய்யவேண்டியவை :**

1. பத்துப்படிகளையும் இலக்கஎண்ணிக்கைக்கேற்ப தயாரித்து கீறிட்ட இடத்தில் வரும் சொற்களைக் கொண்டு நிரப்புக.
2. மூன்று படிப்புதிர்களுக்குரிய விடைகளையும் ஒரே தபாலுறையில் இட்டு 15-6-94க்கு முன் அனுப்புங்கள்.

பரிசு விபரம் ( கல்வி கற்கும் ஆண்டுகளுக்கேற்ற முறை )

1. ஆரம்ப பிரிவு ( 5, 6, 7. 8 ) ஆண்டுகள்
2. மத்திய பிரிவு ( 9, 10, 11 ) ஆண்டுகள்
3. உயர் பிரிவு மற்றோர் ( ஆண்டு குறிப்பிடாதவரும் இப் பிரிவில் அடங்குவர் )

ஒவ்வொரு பிரிவிலும் அதி கூடிய புள்ளிகள் பெறும் நற்பேறாளர் ஒருவருக்கு பரிசு அளிக்கப்படும்.

ஒருவர் ஒரு பிரிவில் மட்டும் பங்கு பெறலாம்.

ஆ. பி. 15/= ம. பி. 15/= உ. பி. 20/= பரிசாக அளிக்கப்படும்.

விடைகளை விரைந்து அனுப்பவும்.

**காவலன் கண்மணிகளே!**

காவலன் களஞ்சியம் 94 பார்வை I இன் முகுவு அடுத்த சுடரில் வரும். சென்ற சுடரில் வந்த,

''உண்மைகளை உணர்த்துவார்'' ஆக்கம் : M. P. விமல் அங். எண், A/51 உடையது. இடவசதி ஏற்படும்போது அங்கத்தவர் பட்டியல் வரும்.

மாதாவின் மாதத்தில் மனமுருகி செபமாலை சொல்லுங்கள். விடிவு நிட்சயம்.

அன்பின், அன்பு விழி,



### 5ஆம் மாத நினைவஞ்சலி

**செல்வி றெபேக்கா செபஸ்தியாம்பிள்ளை**
( ஓய்வுபெற்ற ஆசிரியை )
( கன்னியர் மடம் மகாவித்தியாலயம், இளவாலை )

மண்ணுலகில்
10 - 10 - 1916

விண்ணுலகில்
18 - 12 - 1993


நாரந்தனை ஈன்ற நன் முத்தே ஆசிரிய
மாமணியே சகல கலா வித்தகியே றெபேக்கா
மாதரசே உன் அறிவுப் பேரொளியில் கல்விச் சுடர்
ஏற்றியோர் நற்சேவை இன்று, எங்கணுமே புரிகின்றார்
செந்தமிழ் இலக்கியமும் நாடகமும் ஓவியமும்
தூய கணிதமுடன் கைப்பணி செயற்றிறனும்
மேன்மையுற உம்மிடம்தான் கற்றோமென் றெத்தனையோ
ஆசிரியர் கூறுவதுன் ஆற்றலினைக் காட்டுதம்மா
செயலெண்ணித் துயிலின்றிச் சேவைசெய்து நீர்புரிந்த
சாதனைகள் எண்ணரிது, சீர்பெருமை சொல்லரிது
நாற்பதாண்டு பணிபுரிந்து வானுயர் புகழடைந்தீர்
நம்மிதயத் தும்மைவைத்து விண்ணொளி பெறச்
செபிப்போம்.

18 - 05 - 1994 புதன்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ் பேராலயத்திலும், மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும், அன்னாருக்காக இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

குடும்பத்தினர், உடன் ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள்.

A/13/94

# உரிமைக் குரல் ஆய்வரங்கு





(இவ் ஆய்வரங்கில் பரிமாறப்படும் கருத்துக்கள் மேலும் ஆராயப்படுவதற்குரியவை)

## மண்ணும் மன்னனும் மதமும்

★ அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் O. m. i

### விடுதலையின் வேதனைத் துருவங்கள்:

### மக்களற்ற நிலம்

கலப்பைகள் உழவேண்டிய மண்ணை கனரக வாகனங்கள் உழுகுது.

படகுகள் ஓட வேண்டிய கடலில் படைகள் ஓடுது.

இது தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் நாம் காணும் பரிதாபக் காட்சி. நிலமுள்ள மக்களாக இருந்தும் மக்களற்ற நிலமாக மாற்றப்பட்டது மிகவும் வருந்துவதற்குரியதாகும். திரிகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, தீவகம் யாழ் குடாநாட்டின் கணிசமான பகுதி மக்களற்ற நிலங்களாக மாறிவிட்டன. ஏதோ வழியில் மக்கள் அங்கிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இந்நிலை தமிழ் மக்களுக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால் விடுதலைக்காய்ப் போராடும் பல இனங்களின் துயர அனுபவம் இது. யூதமக்கள் தங்கள் நிலத்திலிருந்து பல தடவைகள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். அகதிகளாக, அடிமைகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் கோரி தன்மானமிழந்து வாழ்ந்தார்கள். ஆசீரிய, பபிலோனிய பேர்சிய, கிரேக்க, றோமானிய கிறிஸ்தவ, மாமலேக்கிய, இஸ்லாமிய ஆங்கிலேய படையெடுப்புகளால், ஆக்கிரமிப்புகளால் சொல்லொணாத் துயரங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஜேர்மனியில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தில் அறுபது இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டார்கள் என்று வரலாறு கூறுகிறது.

இந்தப் பின்னணியில் இலங்கைத்தீவும் எதிர்நோக்கிய ஆக்கிரமிப்புக்கள் ஒன்றல்ல இரண்டல்ல. இந்திய அரசர்கள், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் பல நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தியது நாம் அறிந்த சரித்திர உண்மைகள். ஈழப்போராட்டப் பின்னணியில் தமிழ்ப்பகுதிகளில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டதும், மக்கள் இம்சிக்கப்பட்டதும் கொல்லப்பட்டதும், சிறைப்படுத்தப்பட்டதும் எம் கண்முன்னே நடந்த கோரக் காட்சிகளாகும்.1956-ம் ஆண்டிலிருந்து இற்றைவரை அடிக்கடி இடம் பெற்ற இனக்கலவரங்களால் கொழும்பு, அநுராதபுரம், மலையகம் திரிகோணமலை போன்ற பகுதிகளிலிருந்து, விரட்டி அடிக்கப்பட்டு, நிரந்தரமாகவே இடத்தைவிட்டு வெளியேறியவர்கள் பல்லாயிரம். மக்களற்ற நிலமாக இருந்த, இருக்கும் தமிழ்ப் பகுதிகள் இன்று வேறு இனமக்களால் ஆக்கிரமிக்கப்பட்டும், அரச குடியேற்றத் திட்டங்களால் நிரப்பப்பட்டுக் கொண்டு வருகின்றன.

மக்களற்ற நிலமாக ஆக்கப்பட்டதன் மனோவியல் ஆன்மீக, சமுதாயப் பின்னணி என்ன என்பதை ஆராய்வதிலே பின்வரும் விடயங்கள் தென்படுகின்றன.

மக்களற்ற நிலமாக ஆக்கிவிடுவதால் நிலமற்ற மக்களாக ஆக்கிவிடலாம், ஒரு தனிப்பட்ட இனமே முழு நிலத்திற்கும் உரிமை கோரலாம என்பது ஆட்சியாளர்களின் உள்நோக்காகும். இதன் பின்னணி ஒரு சிறிய இனம் தன் தனித்துவத்தைப் பேண ஆரம்பித்தால் பெரும்பான்மை இனத்துக்கு அது அச்சுறுத்தலாக மாறும் என்பது பெரும்பான்மை இனங்களின் அடிமனப் பயமாகும். குறிப்பாக சிங்களமக்கள் தங்களுக்கென வேறு நாடு இல்லை, இதுமட்டும் தான் நாங்கள் வாழும் நாடு ஆகவே எப்பாடு பட்டாகிலும் இம்மண்ணை எமதாக்குவோம் என்பது அவர்களது விவாதமும், போராட்டமுமாகும்.

தமிழ் மக்களுக்கு ஏன் இப்படி நடக்கிறது என்று பல உள்ளங்களில் கேள்வி எழுகிறது. இதற்கு யூத மக்களின் போராட்ட வரலாறு சில நுட்பங்களை எமக்குக் காட்டி நிற்கிறது. பஞ்சம், படை, பிணி, நோய் போன்றன யூத மக்களைப் பீடித்த சில துன்பங்களாகும். தன்னுணர்வும் தன் நம்பிக்கையும் இழந்த நிலையில் அவர்கள் எதிரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டார்கள், தங்களுக்குள்ளே பிளவுபட்டுப் பலமிழந்த நிலையில் வெளிநிலைச் சக்திகளின் ஊடுருவலுக்கு இரையானார்கள். அறநெறிக் கோட்பாடுகளுக்கும், தெய்வீக வழிகாட்டல்களுக்கும் இணங்க மறுத்த பொழுதெல்லாம் துன்பங்கள் அவர்களைச் சூழ்ந்தன. சௌகரியமான அடிமைத் தனத்தில் சிக்குண்டு அதிலிருந்து வெளியேற மனமற்றவர்களாய், சுயமரியாதை இழந்தவர்களாய் வாழ்ந்த பொழுதெல்லாம் இறைவன் குறுக்கிட்டுப் பல துன்பங்கள் வழியாக விடுவித்ததாக விவிலியம் எடுத்துக்காட்டுகிறது.

ஆன்மீகப் பின்னணியில், நிலமும், சந்ததியும் பொருள் வளமும் இறைவனின் நேரடியான கொடைகள் என்பது விவிலியத்தின் மையப்பொருளாகும். கானான் நாடு இறைவனால் தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடு என்பது யூத மக்களின் நிலைப்பாடாகும். இறைவனால் வாக்களிக்கப்பட்ட நாடு எந்த வல்லாதிக்க அரசுகளுக்கும் அடிபணியாது என்பது அவர்களது மனத்திடனாகும்.

மக்களற்ற நிலம், காடு அல்லது வனாந்திரம் என்று அழைக்கப்படுகிறது. எமது மண்ணின் பல பகுதிகள் பாலைவனமாகக் காட்சி அளிக்கின்றன. மண்ணுக்கு ஆன்மா மக்களே. இன்று மக்களற்ற நிலம் அபயக்குரல் எழுப்புகிறது. ஆனால் அது நம்பிக்கையற்ற நிலையில் இல்லை.

யூதமக்களின் போராட்ட வரலாற்றில் குறிக்கப்பட்ட சில வசனங்கள் எமக்கும் பொருந்தலாம் ''நாங்கள் அகதிகளாக, அநாதைகளாக அடிமைகளாக வாழ்ந்தபோதும், ஈவிரக்கமின்றி நாய்கள் போல் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் இவ்வுலகம் இடுப்பிலே கைகட்டி எம்மைப் பார்த்து நின்றது. எங்கள் குரல்கள் உலக அரங்கில் கேட்கப்படவில்லை. எமது உள்ளக் குமுறல்களை திறந்த அரங்குகளில் வெளிப்படுத்த முடியவில்லை. மாறாகப பதுங்கு குழிகளிலும், மறைவான மசபக கூடங்களிலும ஒரு சில ஆலயங்களிலும மட்டும்ம கதறி அழுதாம.'' இந்நிலைதாடை எய நிலை. யூத மககளின போராட்ட வரலாறு எப்படி முடிந்தது எனபது எயககுத் தொியும. ஆகவே உலங்காது காலமுதாழுத்தாது வீறு நடை போடும்வாய.

( தொடரும் )

யகிமையின்

### 2ஆம் ஆண்டு நிறைவு



**பண்டிதர்**
**பா. செ. ஞானப்பிரகாசம்**

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 1911-08-30 | 1992-05-23 |

தந்தையே நீ எல்லாமே தந்தாய்! தனையர் நாம் தளிர்க்க அன்பினைத் தந்தாய்! மலர் போன்ற பெருமிதயம், ஈந்த ஈசனருள் பேரானந்தம் பெற்று வாழ்வீர்!

இரங்கற் திருப்பலி மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் 1994-05-23 காலை 6-15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டப்பிள்ளைகள்
மைத்துனர் குடும்பம்.

கண்டி வீதி,
மிருசுவில். A/12/94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்துக்கான பாதை எளிதானதல்ல

## ★ தென்னாபிரிக்காவின் புதிய அரசுத்தலைவர் நெல்சன் மன்டேலா

தென்னாபிரிக்காவின் 400 அங்கத்தினர் கொண்ட நாடாளுமன்றத்தில் 252 இடங்களைப் பெற்றுள்ள ANC எனும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் அந்நாட்டின் முதற் கறுப்பினத் தலைவர் நெல்சன் மன்டேலாவின் பதவியேற்போடு அந்நாட்டின் 342 வருட வெள்ளை இன ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

மேலும் இச்செவ்வாயன்று (10-5-94) பிறிற்றோறியாவில் இடம் பெற்ற புதிய அரசுத் தலைவர் பதவியேற்பு வைபவத்தில் உரையாற்றிய தென்னாபிரிக்காவின் புதிய அரசுத் தலைவர் நெல்சன் மன்டேலோ, தென்னாபிரிக்க மக்கள் ஒன்றிணைந்த குலமாக, தேசிய ஒப்புரவுக்கும், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும், ஒரு புதிய உலகப் பிறப்புக்கும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் விண்ணப்பித்தார்.

சுதந்திரத்துக்கான எளிதான பாதை இல்லை என்பதை நாம் அறிந்திருந்த போதிலும், இதனை தனியாக நின்று சாதிக்க முடியாதென்பதைக் குறிப்பிட்டு, எல்லோருக்கும் நீதியும், அமைதியும், வேலையும், உணவும், தண்ணீரும், உப்பும் கிடைக்கட்டுமென்றார். புதிய அரசுத் தலைவர் இந்நாளின் கொண்டாட்டம் புதிதாகப் பிறந்துள்ள மகிமையையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்துகிறது என்றார் அவர்.

புதிய அரசுத் தலைவர் மன்டேலாவின் பதவிப் பிரமாணத்திற்கு அந்நாட்டின் விவிலிய கழகத்தால் அச்சிடப்பட்ட சிறப்பான புதிய விவிலியமொன்று பயன்படுத்தப்பட்டது.

# தமிழ்த்தூதுப் பணி இன்று....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

''தமிழ்த் தூது – தத்துவ போதகர் முதல் தனிநாயகம் அடிகளார்வரை'' என்ற பொருளில் ஆயர் அவர்கள் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் ''பதினாறாம் நூற்றாண்டிலிருந்தே கிறிஸ்தவ மதகுருமார் தமிழ்த்தூதுப் பணியில் ஊக்கமாக ஈடுபட்டு உழைத்தனர் எனக்காணலாம். இப்பணியில் ஈடுபட்ட பல சாரணிகள் அவர்களுக்குத் துணைநின்றன. இவர்கள் வேறு பல மொழிகளை அறிந்திருந்தமையால் தமிழைப் புறநோக்காகக் காணவும், அதன் சிறப்புக்களை அறிந்து கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பு இருந்தது. மேலும் மேனாட்டாருடன் இடையறாத தொடர்பு பூண்டிருந்தமையால் தமிழின் சிறப்பைப் பற்றி எழுதி மேல் நாடுகளிலே பிரசுரிக்கவும், வாசிக்கவும் வசதிகள் இருந்தன.

''மத குருமார் கிறிஸ்தவத்தைப் பரப்பும் நோக்கத்துடனேயே தமிழ்மொழி, இலக்கியம், வானசாஸ்திரம், பண்பாடு என்பவற்றைக் கற்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் தமிழின் இனிமையும் செம்மையும் அவர்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்டன. ஆகவே சில மதப் பிரசாரர்கள் சமயப்பணியிலும் பார்க்கத் தமிழ்ப்பணியில் அதிகமாக ஈடுபட்டார்கள் என்பதைக் கண்டு கொள்ளலாம். அவர்கள் தொண்டினால் உலகத்தார் தமிழின் பெருமையை அறிந்துகொள்ள வாய்ப்புக் கிட்டியது,'' எனக் குறிப்பிட்டார். தனது பேருரையின் முடிவாக, ''தமிழ்த் தூது இன்று எமக்கு மிகவும் அவசியமான செயற்பாடாகும். பன்மொழியார்வமும், ஆராய்ச்சி வேட்கையும், பல தேசந்சார ஆசையும்கொண்ட இளைஞர்கள் இத்துறைக்கு தம்மையே அர்ப்பணிக்க வேண்டும். தமிழ்தூதுப் பணியில் ஈடுபடுவதற்கு மற்றெல்லாவற்றையும் விடக் கத்தோலிக்க மத குருமாருக்கே அதிக தகுதியும் கடப்பாடும் உண்டு என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். தனிநாயகம் தமிழ் மன்றத்தைச் சேர்ந்த ஒரு சிலராவது இப்பணிக்குத் தம்மை அர்ப்பணிப்பார்கள் என்று எண்ணுகிறேன்.'' என்று கூறித் தன் பேருரையை நிறைவு செய்தார் ஆயர் ஜெபநேசன் அவர்கள்.

● தமிழ்நேசன்

# பூனைத் தொடு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் அங்கு வருகை தந்த ஆயர் அவர்களை மிகவும் ஆர்வத்துடனும் குதூகலத்துடனும் மக்கள் மதவேறுபாடின்றி திரண்டு வரவேற்றனர். அன்று பங்குத்தந்தை அருள்திரு அன்ரனி பாலா அடிகளால் ஒழுங்கு செய்யப்பட்டு ஆயத்தம் செய்யப்பெற்ற 134 பிள்ளைகளுக்கு ஆயர் உறுதிப்படுத்தல் எனும் அருள்சாதனம் வழங்கினார்.

# அமைதிப்பணி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்நகர் விஜயம செய்து நாட்டின் அமைதிக்காக ஆரம்பித்த பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென ஆயர் பேரவை அவரை விண்ணப்பித்துள்ளது.

இவ்வமர்வில் யாழ் குடாநாட்டின் உண்மையான நிலைமையைப் பற்றி எடுத்துரைத்த யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை. இன்னல்கள் மத்தியில் மக்களின் சகிப்புத்தன்மைக்கு ஓர் எல்லையுண்டென்றும், மக்கள் நிலையான அமைதியையே இதய பூர்வமாக விரும்புகிறார்கள் என்பதையும் வலியுறுத்தினார். மன்னார் ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை மடுவில் இருக்கும் பல்லாயிரம் அகதிகளின் அவல நிலைமையைப் பற்றி மற்றும் ஆயர்களுக்கு எடுத்து விளக்கினார்.

# கத்தோலிக்க திருச்சபையும் நாட்டின் வளர்ச்சியும்

CBCI என்னும் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் பொன்விழாவையொட்டி நடந்த அதன் 23 வது பொது அமர்வில் கலந்து கொண்ட 5000 பேருக்கு உரையாற்றிய இந்திய அரசு உதவித் தலைவர் K.R. நாறாயண் அவர்கள், ஆயர்கள் இந்தியாவின் ஆன்மீக மற்றும் சமூகத் தலைவர்கள் என்று பாராட்டிப் பேசினார். இந்திய கத்தோலிக்க திருச்சபை நாட்டுக்குச் செய்துவரும் பணிகளைப் பற்றிபாராட்டிப் பேசிய அதே வேளை, அயோத்திய பிரச்சனைகளுக்குப் பின்னான விவகாரங்கள் உட்பட நாடு எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டினார்.

கிறிஸ்துவ மதப்பீடங்களின் வருகை இந்திய கலாசாரத்தை வளப்படுத்தி, நாட்டினது ஆன்மீக, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளது என்றார் அவர்.

# தென்னாபிரிக்க புதிய பாராளுமன்றத்தில் கத்தோலிக்க குரு ஒருவர்

ANC என்னும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சார்பில் வேட்பாளராக நின்று, வெற்றி பெற்று, புதிய பாராளமன்றத்தின் அங்கத்தினராய் கத்தோலிக்க குரு– மங்களேசு மிக்காட்சுவா-தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் தென்மண்டல ஆயர் பேரவையின் முன்னாள் செயலாளராகப் பணியாற்றியவர்.

தென்னாபிரிக்க அரசில்பணி புரிவதெற்கென அதிக பட்சம் 5 ஆண்டுகள் அனுமதிக்கப் பட்டுள்ளார் குரு மிக்காட்சுவா. தனது புதிய பணி அச்சத்துக்குரிய சவாலாக இருக்கின்றது என்று கூறியுள்ள இக்குரு, புதிய அரசின் தொடக்க காலம் கடினமாக இருக்கும் அதேவேளையில், அரசு தனது கடமைகளை நிறைவேற்ற மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று விண்ணப்பித்தார்.

# சிறப்பு ஆயர் பேரவையால் 61 பரிந்துரைகள்

## ஆயுத விற்பனைகளை நிறுத்துங்கள்

வத்திக்கானில் இடம்பெற்ற ஆபிரிக்காவிற்கான சிறப்பு ஆயர்கள் பேரவை முடிவில் ஆயர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

ஆபிரிக்காவின் 9 கோடி 50 லட்சம் கத்தேலிக்கர்களும் ஒரு வளரும் திருச்சபையின் அடையாளமாயிருப்பதாகவும், அந்நாட்டில் நற்செய்தி அறிவிப்பு இன்னும் தொடர்ந்து இடம் பெறவேண்டுமென ஆயர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

தென்னாபிரிக்க அண்மைத் தேர்தலைக் குறித்து தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்ட ஆயர்கள், ஜனநாயகத்தை ஊக்குவிக்கவும், அரசியல் மற்றும் பொளாதாரத் துறைகளில் பொதுநிலையினரின் பங்கேற்பைப் பலப்படுத்தவும் தலத் திருச்சபையின் பணி இன்றியமையாதது எனவும் கூறியுள்ளார்கள்.

பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையிலுள்ள சரி நிகரான, நீதியான பங்கேற்பைக் குறித்தும் தங்கள் இறுதியேட்டில் விண்ணப்பித்துள்ளனர் ஆயர்கள்.

பெண்களின் மாண்பு மதிக்கப்படவேண்டும், குடும்பங்கள் பாதுகாக்கப்படவேண்டும், ஆபிரிக்கக் கண்டத்திற்கான ஆயுத விற்பனை நிறுத்தப்பட வேண்டும் என்பன உட்பட 61 இறுதிப் பரிந்துரைகளைக் கொண்ட 16 பக்க இவ் ஏடு திருத்தந்தையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# இறைநம்பிக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி மூலம் ஒழுக்கத்தில் மாணவரை வழி நடாத்தி, தியாக சிந்தையுடன் பணியாற்ற வேண்டும்'' என்று கல்விப்பணிப்பாளர் செல்வி பெரியதம்பி அவர்கள் உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து யாழ். வலயம் ஒன்றின் (திட்டமிடல் பிரிவு) பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு S. சுப்பிரமணியம் உரையாற்றுகையில் ''தற்காலச் சூழ்நிலைக்கேற்ப நாம் மக்களை நெருங்கிச் செல்லவேண்டும், என்றும் மக்களின் விருப்புக்களை மையமாக வைத்து நமது செயற்பாடுகளையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

''மதம் சார்ந்த எமது பணி இன்னும் மக்களோடு எம்மை இணைக்கத் தூண்டவேண்டும், மதத்தலைவர்கட்கும் மக்களுக்கும், ஆசிரிய உலகிற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டும். அதன் மூலமே நற் சமூகத்தை உருவாக்கலாம்'' என்றார்.

சமயபாட வலய இணைப்பாளர் S. S. P அமல்ராஜ் அவர்கள் நன்றியுரையில் ''சமய ஆசிரியர்கள் தங்கள் பொறுப்புக்களை உணர்வுடன் புதிய தேடல்களை கண்டறிய இது போன்ற செயல் அமர்வுகளும் பயிற்சிகளும் புதிய கற்பித்தல் வழிக்கு பெரும் துணைபுரிய உதவுகின்றது என்பதை உணர்ந்து பங்கு கொண்டனர்'' என்று கூறி இப்பயிற்சியிற் கலந்து கொண்ட ஆசிரியர்களின் சார்பில் இந்நிகழ்ச்சியை சிறப்பித்து ஊக்குவிக்க வருகை தந்த கல்விப்பணிப்பாளர் செல்வி பெரியதம்பி அவர்கட்கும் திட்டமிடல் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்கட்கும் பயிற்சி ஆசிரியர்கள் சார்பில் நன்றி பகர்ந்தார்.

# ''விவிலிய விருந்து''

திருச்சி அருள்வாக்கு மன்றத்தினரால் வெளியிடப்படும் ''விவிலிய விருந்து'' எனும் (புதிய சஞ்சிகையை) பெற விரும்புவோர், ஆண்டு சந்தா ரூபா 140/= அனுப்பி, பின்வரும் முகவரிகளில், மே மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யவும்.

அருள்திரு. அன்ரன் மத்தாயஸ்
புனித ஆசீர்வாதப்பர் கோவில்
கச்சேரிநல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

அருள்திரு M. E பயஸ்
மேய்ப்புப்பணி நிலையம்
கரடிப்போக்கு, கிளிநொச்சி


## செம்பியன்பற்று

# புனித பிலிப்புநேரியார் யாத்திரைத்தலம் திருவிழா 1994

| | | |
|---|---|---|
| மே | 17 | கொடியேற்ற உற்சவம் மாலை 5 மணி |
| மே | 18 – மே 24 வரை | தினமும் திருப்பலி மாலை 5 மணிக்கு இடம்பெறும். |
| மே | 22 | நற்கருணைத் திருவிழா திருப்பலி காலை 7 மணி (முதல்நன்மை தினம்) நற்கருணை ஆராதனை, பவனி, ஆசீர்வாதம் மாலை 5 மணி |
| மே | 23, 24 | **மாபெரும் விவிலியக் கண்காட்சி** |
| மே | 25 | திருப்பலி காலை 6-30 மணி மாலைப்புகழ் மாலை (Vespers) மாலை 6-30 மணி |
| மே | 26 | திருப்பலி காலை 5 30 மணி திருவிழாத் திருப்பலி காலை 7-00 மணி |

— பங்குத்திருச்சபை

(பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து மே 25 பஸ் சேவை உண்டு)

A/14/94


இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரி[illegible] கத்தோலிக்க அச்சகத்தில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல. B/Q 1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org